**நோர்வூட் பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 மே 21 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை என்பன 2020 யூன் 19 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நோர்வூட் பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த 09 மாதங்களுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,311,756 பெறுமதியான 28 நிலையான சொத்துகள் பண்டக கையிருப்புக் கணக்கின் கீழ் கணக்கிடப்பட்டிருந்ததால் ஆண்டின் மூலதனச் செலவு மற்றும் நிலையான சொத்துக்களின் பெறுமதி அந்தத் தொகையை விடவும் குறைவாக நிதியறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் நிதியறிக்கையைத் தயாரிக்கும் போது இந்தத் தவறை சரி செய்கிறேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபையின் (நிதி மற்றும் நிர்வாகம்) 218 ஆம் விதி | காணி மற்றும் கட்டிடம் தொடர்பில் வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது . |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 880 | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அம்பகமுவ பிரதேச சபையில் இணைக்கப்பட்டுள்ள உததியோகத்தர்களின் ஊழியர் பிணை சபைக்கு கிடைக்கவிலல்லை. ஏனைய உத்தியோகத்தர்களின் பிணை அறவீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/ 22 ஆம் இலக்க சுற்றறிக்கை | வீத வரி அறவிடுவதற்காக காணி மதிப்பீடு 2010 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | வீதவரி கட்டணங்களை மீளமைத்து தருமாறு மதிப்பீட்டுத் திணைக்களடத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,105,145 ஆக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டின் ஒன்பது மாதங்களின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,981,663 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ள

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,480,000 | 2,658,437 | 3,420,547 | 476,558 | 3,288,500 | 1,634,599 | 1,642,112 | 1,021,319 |
| வாடகை | 8,215,000 | 7,993,814 | 8,249,482 | 2,191,700 | 1,712,180 | 5,517,280 | 5,858,196 | 2,447,368 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,311,000 | 2,693,871 | 2,693,871 | - | 1,530,000 | 660,500 | 660,500 | - |
| ஏனைய வருமானம் | 3,872,000 | 4,189,923 | 3,238,386 | - | 4,590,000 | - | 135,382 | - |
| மொத்தம் | 17,878,000 | 17,536,045 | 17,602,286 | 2,668,258 | 11,120,680 | 7,812,379 | 8,296,190 | 3,468,687 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,177,161 ஆன காணி பரிமாற்றல் முத்திரைக் கட்டணம் ரூபா 736,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை முத்திரைக் கட்டணத்தில் ரூபா 1,155,828 தொகை தற்போது கிடைத்துள்ளதுடன் 2019 யூலை முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய அட்டவணை கிடைக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிகழ்ச்சித் திட்ட வரவு செலவு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 3,150,000 பெறுமதியான 11 திட்டங்கள் 2019 செப்டம்பர் மாதம் 03 ஆம் திகதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | யதார்த்தமான வரவு செலவு ஆவணம் தயாரிக்கப்படல் வேண்டும். | சபையில் நிதி நிலைமை இல்லாத காரணத்தால் இந்தத் திட்டங்களை செயற்படுத்த முடியாமல் போனது. |

### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | 202 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

### (ஆ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அம்பகமுவ பிரதேச சபையினால் ரூபா 9,045,317 செலவில் பாதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த நோர்வூட் தகன மண்டபம் சபைக்கு கைளிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் எவ்வித செயற்பாடுகளும் நிறைவேற்றப்படாமையால் விளைவற்றுக் காணப்பட்டது. | விரைவில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். | இந்தத் தகன மண்டபத்தை உபயோகிக்க முடியாத நிலைமையிலேயே சபையிடம் ஒப்படைத்திருந்ததோடு ஏனைய வேலைகளைப் பூர்த்தி செய்ய 2020 நிதி மூலதனத்தைப் பெற்றுக் கொள்வதற்காக விலை மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளதோடு அதன் பிறகு ஏனைய வேலைகளைப் பூர்த்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பொகவந்தலாவையில் கழிவுகள் கொட்டப்படும் இடத்தில் கொம்போஸ்ட் சேதன உரத் தயாரிப்புக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் ஆனது, அச் செயற்திட்டம் மேற்கொள்ளப்படாததால் விளைவற்றதாகக் காணப்பட்டது. | செயற்திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் தொடங்கி உரிய நடவடிக்கையை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. |

(இ) **சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அதிகாரப் பிரதேசத்தில் முறையான கழிவுப்பொருள் முறைமையொன்று இடம்பெறவில்லை. பொகவந்தலாவ நகரில் கழிவுப்பொருள் அகற்றும் காணியில் கலவை கழிவு எரிக்கப்பட்டு எஞ்சிய கழிவு முறையற்ற விதத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ளது. | முறையான கழிவுப்பொருள் முகாமைத்துவம் இடம்பெற வேண்டும். | சேதன மற்றும் உக்காத மூலப்பொருட்களை மீள்சுழற்சிக்காக தேவையான வளங்கள் மற்றும் பதவியணியினர் இல்லாமையால் கொம்பொஸ்ட் பிரிவு செயற்பத்தப்படவில்லை. |

**(ஈ) அனுமதியற்ற நிர்மாணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட மற்றும் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக சபை எவ்வித நடவடிக்கையையும் பின்பற்றாததோடு, கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தொடர்பான ஆவணப் பதிவொன்றை மேற்கொண்டிருக்கவும் இல்லை. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக தற்போது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதோடு வருங்காலத்தில் அது தொடர்பான ஆவணப் பதிவொன்றை மேற்கொள்ள அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

(உ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக சபை அறிந்திராமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அதன் பிரகாரம் திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 20 பதவிகளில் 78 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அலுவலக ரீதியான பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டுள்ளதோடு வருங்காலத்தில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அலுவலக ரீதியற்ற பதவிகள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையருக்கு அறியத் தரப்பட்டுள்ளது. |

3.3 **செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படும் அனைத்து பொது மலசல கூடங்களும் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்தனவாகவும், அசுத்தமானவையாகவும் கைவிடப்பட்டிருந்தன. | மலசலகூடங்கள் சீர் செய்யப்பட்டு பயன்படுத்தப்படல் வேண்டும். | இந்த மலசலகூடங்களைப் பாவனைக்கு உகந்தவையாக ஆக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மலசலகூடங்களை முறையாகப் பேணுவதற்கு போதியளவு பணியாளர்கள் இல்லாத காரணத்தால் தொடர்ந்தும் கூலித் தொழிலாளர்களை ஈடுபடுத்த இயலவில்லை. |
| (ஆ) | பொகவந்தலாவை மற்றும் பூலியாவத்த ஆயுர்வேத வைத்திய மத்திய நிலையத்தை நடாத்திச் செல்லல். | | |
| | 2018 ஆம் ஆண்டு மே மாதம் 27 | | |

| | | |
|---|---|---|
| ஆம் திகதியின் பின்னர் இந்த ஆயுர்வேத வைத்திய மத்திய நிலையம் மூடப்பட்டுள்ள காரணத்தால் சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேச மக்கள் ஆயுர்வேத சிகிச்சையைப் பெற்றுக் கொள்வது முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு அவசியமான சேவைகள் வழங்கப்படல் வேண்டும். | ஆயுர்வேத வைத்தியர் ஒருவருக்கான வெற்றிடம் காணப்படுவதோடு இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரிடம் அறியத் தரப்பட்டுள்ளது. |

3.4 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பகமுவ பிரதேச சபையினால் பொறுப்பளிக்கப்பட்டிருந்த 28 காணித் துண்டுகளில் 26 உரிய உறுதிப் பத்திரங்கள், 24 இற்குரிய திட்ட படங்கள் சபையிடம் காணப்படவில்லை. | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறிக்கையிடப்பட வேண்டும். | தற்போது இரண்டு ஆதனங்களின் திட்டவரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்காக பாரியளவு பணம் செலவாவதால் சபையின் நிதி நிமையின் பிரகாரம் இச்செயற்பாடுகள் பகுதி பகுதியாக நிறைவேற்ற எதிர்பார்க்கப்பட்டுள்ளது |
| (ஆ) | 20 காணித்துண்டுகளின் பரப்பளவு இனங்காணப் பட்டிருக்கவில்லை. | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறிக்கையிடப்பட வேண்டும். | குறித்த காணிகள் இனங்காணப்பட்டு வரப்படுகின்றது. |

3.4.1 **விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரவீந்திரன் சிறுவர் பூங்கா | | |
| பூலியாவத்த அலுவலக காணிக்கு அண்மித்ததாக 40 பேர்ச் அளவில் ரவீசந்திரன் சிறுவர் பூங்கா, 10 ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன் பூங்கா நிலத்தில் புற்கள் வளர்ந்து உபகரணங்கள் சிதைவடைந்து காணப்பட்டன. | எதிர்காலத்தில் ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில் லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஹொன்சி - பூலியாவத்த கழிவுப் பொருள் நிலையம், பொகவந்தலாவ மாடுகொல்லுமிடம், கொட்டியாகல தோட்டத்தில் கொம்போஸ்ட் செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் நோவூட் பொலிசுக்கு அண்மையிலான காணி ஆட்டிறைச்சிக் கடை மற்றும் காணி மற்றும் சேவை அறை மற்றும் காணி மற்றும் ஆதனங்கள் பயன்பாட்டிற்கு விளைவற்றக் காணப்பட்டன. | எதிர்காலத்தில் ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில் லை. |

3.4.2 **வாகன பாவனை**

--------------------

| | **கணக்காய்வு அவதானிப்பு**<br>---------------------------------- | **பரிந்துரை**<br>------------ | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**<br>------------------------------ |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய க்ரூ கெப் வாகனத்தின் மைலோ மீட்டர் ஒரு ஆண்டுக்கும் அதிகமாக செயலிழந்து காணப்படுகிறது. | மைலோ மீட்டரை பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மைலோ மீட்டரைப் பொருத்துவதற்காக கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களுக்குரிய 2019 ஆம் ஆண்டின் போக்குவரத்துக் குறிப்புகள் கணக்காய்வுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்காததோடு இந்த 03 வாகனங்களுக்காகவும் மீளாய்வாண்டில் ஜனவரியில் இருந்து திசெம்பர் வரையான காலப் பகுதிக்குள் எரிபொருளுக்காக ரூபா 854,478 செலவழிக்கப்பட்டிருந்தது. ஓட்டக் குறிப்புகள் சமர்ப்பிக்கப்படாமையால் இந்த எரிபொருள் செலவானது உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளாக கணக்காய்வின் போது நிரூபிக்க முடியவில்லை. | பதிலுக்கு ஏற்ப போக்குவரத்து குறிப்புகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | இந்த போக்குவரத்து குறிப்புகளை 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | தலைவரின் பயன்பாட்டிற்காக வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனத்துக்கு | சபைக்குப் பொருத்தமான கெப் வாகனமொன்றை கொள்வனவு செய்ய | இது தொடர்பாக தலைவரிடம் அறியத் தரப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| மீளாய்வாண்டின் ஜனவரியிலிருந்து திசெம்பர் வரையான வாடகையாக ரூபா 2,606,853 செலவழிக்கப்பட்டிருந்தது. இந்தப் பணத் தொகையைப் பயன்படுத்தி கொடுப்பனவு முறையில் வாகனத்தை கொள்வனவு செய்திருந்தால் குறிப்பிட்ட காலத்தின் முடிவில் வாகனத்தின் உரிமை சபைக்குக் கிடைத்திருக்கும் என்பதோடு அது வாடகைக்கு வாகனத்தைப் பெற்றுக் கொள்வதைக் காட்டிலும் இலாபமானதாக இருந்திருக்கும். | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

4.2 **உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |